முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1084

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.09.2022, சனிக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார சற்குருவே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 32 நாள், 17.09.2022 சனிக்கிழமை)
2. வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தில் உலகோர் ஞானம் பயில
திறம்பட அவரவரும் ஞானவானாகி
தேசிகன் வழிகாட்டலில் ஞானலோகம் படைப்பர்
3. ஆகவே அரங்க மகான் ஞான உபதேசங்கள்
ஆற்றலாக உலகெங்கும் பரவி வர
வரங்களாக கருதி உலக மக்களெல்லாம் வணங்கி
அரங்கன் குடில் நோக்கி வந்தால் போதும்
4. போதுமப்பா அனைவருக்கும் ஞான சித்தி
புண்ணியவடிவில் இனிதே உயர்வாய் கிட்டி
நன்னயமாய் அவரவர்க்கும் பிறவா பெரும்பேறு
நாட்டிடுவேன் அரங்கன் தயவால் உறுதியாகும்
5. ஆகவே தர்மத்தோடு அரங்கன்
காட்டுகின்ற தயவு நெறியை
சத்திய நெறியாக பெருமைகொண்டு உலகோர் ஏற்று
பேருலகமெல்லாம் அன்னதான சேவை யாற்ற
6. ஆற்றவே உலகம் சடுதி தர்மலோகமாகி
ஆற்றல்மிக்க ஞானவான்கள் படை நிறைந்த
ஞான ஆட்சிக்காலமாகவும் மாறுதல் கண்டு அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–